**தலைப்பு 287 - காணி நிர்ணயத் திணைக்களம்**

**..........................................................................**

## 1. நிதிக்கூற்றுக்கள்

**............................**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**......................................................**

காணி நிர்ணயத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி நிர்ணயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூலை 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களதின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி நிர்ணயத் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**.......................................................................**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

**.....................................................................................................................**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக்

கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

………………………………………………………………………………………………..

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புகள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

……………………………………………………………..……

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந்நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தபப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

..................................................................................

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

......................................................

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

...........................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ....................................................... | ..................................... | ....................... |
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதியற்ற சொத்துக்கள் அதாடர்பான கூற்றின் (ஏசீஏ- 06) இறுதி மீதியிலும் மீளாய்வாண்டின் இறுதியில் சமர்ப்பிக்கப்பட்ட (ஏசீஏ-06) கூற்றின் ஆரம்ப மீதியிலும் அலுவலக உபகரணங்களின் பெறுமதி ரூபா 786,350 குறைத்தும் கணனி இலத்திரனியல் உபகரணங்கள், மனைப் பொருட்கள் என்பவற்றின் பெறுமதி ரூபா 786,350 ஆல் அதிகரித்தும் பதியப்பட்டிருந்ததுடன் உரிய வித்தியாசத்தை சொத்துக்கள் கணக்கின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிழைகள் தற்பொழுது இனங்காணப்பட்டு ள்ளதனால் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டிற்கான இறுதிக் கணக்கு மீதிகள் மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதியாக முன்கொண்டுவரப்படுதல் வேண்டும். |

**(ஆ) கட்டுநிதி மீதி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ....................................... | .............................. | ..................... |
| 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட கட்டுநிதி கணக்கு தொடர்பான கூற்றின் (ஏசீஏ-03) பிரகாரம் கட்டுநிதி பெறுவனவுகளுக்கும் தீர்த்துவைத்தல்களுக்குமிடையே வித்தியாசம் இல்லாதிருந்த போதிலும் திறைசேரி கணனி அச்சுக் குறிப்புக்களின் (SA-70) பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாத முற்பண மீதி ரூபா 330,000 ஆக இருந்தது. | 2021-10-15 ஆந் திகதியில் வழங்கப்பட்ட ரூபா 330,000 கட்டு நிதியானது திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் என இனங்காண்பதற்கு முடியாமையின் காரணமாக இவ்வாறு தீர்த்துவைக்கப்படாத முற்பணங்களாக ஆண்டின் இறுதி மீதியின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் மாதாந்தம் திறைசேரி அச்சுக் குறிப்புக்களுடன் ஒப்பீடு செய்யும் நடவடிக்கை இடம்பெறுவதனால் எதிர்காலத்தில் இவ்வாறான பிழைகள் இடம்பெறாமல் இருப்பதற்கு கவனித்துக் கொள்ளப்படும் என தயவாகத் தெரிவிக்கிறேன். | திணைக்கள ஏடுகளின் மீதியானது திறைசேரி ஏடுகளின் மீதியுடன் சமமாக இருத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

....................

### 2.1 செலவு முகாமைத்துவம்

...........................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ............................................ | .............................. | .................... |
| மூன்று மூலதன செலவு விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 74,000,000 நிதி ஏற்பாட்டில் ரூபா 38,319,896 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அச்சேமிப்புக்கள் 59 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. அதற்கிணங்க ஏனைய அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக செலவு செய்வதற்கு முடியுமாகவிருந்த ரூபா 38,319,896 தொகையான நிதி ஏற்பாடு | நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையை முன்னிட்டு நிதி அமைச்சிடமிருந்து 2021-08-31 ஆந் திகதி வழங்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மூலதன செலவு விடயங்களிலிருந்து சேமிப்புக்களை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினை முழுமையாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அதற்கிணங்க மூலதனச் செலவு விடயங்களை கட்டுப்படுத்துதல் இடம்பெற்றது. | |

2.2 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

.................................................................................................

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஒழுங்கு விதிகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

....................................

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|
| | .......................... | ......................... | ............................ | ...................... |
| (அ) | இலங்கை சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாண கோவை<br>..............................<br>நி.பி 104 (3) | நட்டங்கள் அல்லது சேதங்கள் சம்பந்தமாக முழுமையான அறிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்படுமாகவிருந்தால் தொடக்க அறிக்கையினை உடனடியாக அனுப்பிவைக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் ஏப்ரல் 03 ஆந் திகதி NA-6026 ஆம் இலக்க வேனுக்கு விபத்தினால் ஏற்பட்ட ரூபா 10,500 நட்டம் சம்பந்தமாக தொடக்க அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு 08 மாதங்கள் அளவிலான காலம் எடுத்திருந்ததுடன் 2022 மார்ச் 25 ஆந் திகதி வரை முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்கிறேன். 2022 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் இந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | நி.பி 104(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை**

..............................

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2016 திசெம்பர் 29 ஆந்திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு எரிபொருள் பரீட்சிப்பிற்கும் பின்னர் 12 மாதகால அல்லது 25,000 கிலோ மீற்றர் தூரம் ஓடியதன் பின்னர் அல்லது இன்ஜின் தொடர்பாக பிரதான திருத்தங்கள் செய்ததன் பின்னர் ஆகிய விடயங்களுக்கு மத்தியில் முதலில் ஈடுபடுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்திற்குப் பின்னர் மீண்டும் எரிபொருள் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020, 2021 ஆம் ஆண்டுகளில் நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையின் கீழ் ஆண்டில் அதிக காலம் அலுவலகம் மூடப்பட்டிருந்தமை மற்றும் சுகாதார சட்ட விதிகளின் கீழ் செயற்பட்டதனால் சுற்றறிக்கைக்கு இணங்க எரிபொருள் பரீட்சிப்புக்களை அனைத்து வாகனங்கள் சம்பந்தமாகவும் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. எதிர்காலத்தில் காணப்படுகின்ற வசதிகளின் அடிப்படையில் இச்செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் பரீட்சிப்பினை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ii) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2018 (I) ஆம் இலக்க சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் பிரசை/சேவை நாடுனர் நியதிச் சட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட வேண்டிய போதிலும் திணைக்களம் அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரசை சேவை நாடுனர் நியதிச் சட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்படு வதற்கு குறித்துக் கொண்டுள்ளேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் பிரசை/சேவைநாடுனர் நியதிச்சட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 02 படிவம் | சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 02 இன் பிரகாரம் அந்த படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு திணைக்களத்தின் மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மனிதவளங்கள் அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுப்பேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

**(இ) அரசாங்க நிதி சுற்றறிக்கை**

| | | | |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 1/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை | அரசாங்க நிதி, வருமானம், பொருட்களைப் பொறுப்பேற்றல் அல்லது பொறுப்பாக இருத்தல் அவ்வாறு இல்லாவிடின் அரசாங்க பணத்தை பகிர்ந்தளித்தல் அல்லது பொருட்களை வழங்குதல் சம்பந்தமாக நிருவாக ரீதியாக பொறுப்புக்கூறக்கூடிய உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய பிணைப்பதிவேடு திணைக்களத்தினால் பேணப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்காக உத்தியோகத்தர்களின் பெயர்களில் சேமிப்புக் கணக்கினைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பிணைத் தகவல்களை உள்ளடக்கிய ஒரு பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 87,930,359 இலிருந்து ரூபா 124,000,000 வரை 41 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் ஒவ்வொரு செயற்திட்டத்திற்காக திட்டமிடப்பட்ட இலக்கு 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 15 சதவீதத்திலிருந்து 22 சதவீதத்தினால் மீளாய்வாண்டின் போது வீழ்ச்சியடைந்திருந்தது. | நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையும் சுகாதார சட்ட விதிகளும் இதற்கு காரணமாகும். | பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்தின் செயல்முன்னேற்றத்தை அதிகரிப்பதற்காக வருடாந்த இலக்கினை தோற்றுவித்தல் மற்றும் அவற்றினை அடைந்து கொள்ளல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம் 2002 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியளவில் நாட்டிலுள்ள அனைத்து காணிகளும் அளவீடு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட மொத்த கிரயம் ரூபா 5,635.6 மில்லியனாக இருந்ததுடன் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 17 ஆண்டுகள் கடந்திருந்தும் 331 பிரதேச செயலகப் பிரிவுகளில் 66 பிரிவுகளில் மாத்திரம் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் ஆரம்பிக்கப்பட்ட 66 பிரதேச செயலகப் பிரிவுகளின் 3899 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 1394 பிரிவுகளில் மாத்திரம் நில அளவை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அதற்கிணங்க இச் செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றம் திருப்தியற்ற மட்டத்தில் காணப்பட்டது. | பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தினை ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்குத் தேவையான நிறுவனங்களுக்கிடையே ஒத்துழைப்பினை உருவாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இந்நிகழ்ச்சித் திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு உள்ள தடைகளை இனங்கண்டு அவற்றினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1897 தரிசுக் காணிகள் கட்டளைச் சட்டம் மற்றும் 1931 காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தை அமுல்ப்படுத்துவது தொடர்பாக பேணப்படுகின்ற நுர்று ஆண்டுகளை மிகைத்த பழைய காணிப் பேரேடு மற்றும் ஏனைய ஆவணங்களைப் பாதுகாப்பதற்காக 287-2-1-0-2509 இக்க செலவு விடயத்தின் கீழ் ரூபா 8,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் உரிய ஆவணங்களை ஸ்கேன் செய்யும் செயற்திட்டத்திற்காக அதில் எந்த நிதி ஏற்பாட்டினையும் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் மற்றும் சுகாதார சட்ட விதிகளின் அடிப்படையில் ஆவணங்களை ஸ்கேன் செய்யும் நடவடிக்கையை மேற்கொள்ள முடியாதிருந்தது. | வருடாந்த இலக்கினை திட்டமிட்டவாறு அமுல்ப்படுத்த வேண்டியதுடன் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்த ஆண்டிலேயே பயன்படுத்த வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக திணைக்கள வளவில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள 53 சிறீ 0049 ஆம் இலக்க பழுதடைந்துள்ள டபிள் கெப் வாகனம் 2019 மே மாதத்தின் போது ரூபா 2,000,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் கைதவிர்ப்பு சம்பந்தமாக இன்னும் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | உரிய வாகனத்தை கைதவிர்ப்புச் செய்வதற்கு அல்லது திருத்தம் செய்து ஓடுவதற்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ரூபா 36,400,000 பெறுமதியான காணி உரிமைகளை நிர்ணயிக்கும் ஆணையாளர் நாயகத்தின் பத்தரமுல்லையில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லமானது நிதி நிலைமை கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அது அமைந்துள்ள காணியின் பெறுமதி நிதிக்கூற்றுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள காணியின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்காக திணைக்களத்திற்கு ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள காணியின் பெறுமதி நிதிக்கூற்றுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) அரசாங்கத்தினால் அறவிட வேண்டிய பணம் சம்பந்தமாக பிரதான கடனாளிகளிடமிருந்து, பிணையாளர்களிடமிருந்து அல்லது வாரிசுக்காரர்களிடமிருந்து அறவீடு செய்ய முடியாதாயின் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்தும் சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிட வேண்டிய ரூபா 205,369 மொத்த தொகை சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் XXIV | மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களில் ஒரு உத்தியோகத்தரிடமிருந்து கடன் அறவிடப்பட்டு வருவதுடன் மற்றைய உத்தியோகத்தருக்கு இன்றுவரை மரண பனிக்கொடை செலுத்தப்படாததுடன் மரண பணிக்கொடையை செலுத்தும் போது கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடனை மீளச் செலுத்துமாறு சேவையை கைவிட்டுச் சென்ற ஊழியருக்கு கடிதத்தின் மூலம் | தாபன விதிக் கோவையின் பிரகாரம் கடன் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் அத்தியாயத்தின் 4.6 அம் பந்தியின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டின் போது 60,000 உரிமைச் சான்றிதழ்களை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டு ரூபா 124,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் ஆண்டின் போது வழங்கப்பட்ட உரிமைச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 13,907 ஆக இருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட உள்ளபடியான செலவு ரூபா 94,406,000 ஆகும். அதற்கிணங்க சான்றிதழ்களை வழங்குவதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பணம் ரூபா 2,067 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான செலவு ரூபா 6,788 ஆக இருந்தது. | கடந்த கொவிட் தொற்று நோய் காலத்தில் அலுவலகம் மூடப்பட்டதன் காரணமாக வெளிக்கள கடமைகளில் ஈடுபடமுடியாதிருந்தமை பத்திரங்களை பரீட்சிப்பதில் சிக்கல் முதலியவற்றின் தாக்கத்தின் அடிப்படையில் உரிமையை நிர்ணயித்தலினை வர்த்தமானியில் வெளியிடுதல் புள்ளிவிபர ரீதியாக குறைவடைந்துள்ளது என்பதனை ஏற்றுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக பதிவாளர் நாயகத் திணைக்களத்துடன் இணைந்து செயல் முன்னேற்றத்தை இன்னும் அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | திட்டமிட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்கு முறையான வேலைத் திட்டத்தினை தயாரித்து அதறிகிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் போது காணிப் பதிவாளர் அலுவலகத்தினால் வழங்கப்பட்ட உரிமைச் சான்றிதழ்கள் 22,485 ஆக இருந்ததுடன் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை 13,907 மாத்திரமாகும். உரிமைச் சான்றிதழ்களை பகிர்ந்தளிப்பதில் காணப்பட்ட பலவீனங்களின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியளவில் இன்னும் உரிமையாளர்களிடையே பகிர்ந்தளிப்பதற்கு எஞ்சியிருந்த உரிமைச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 21,231 ஆக இருந்தது. | 14 ஆம் பிவரிவின் கீழ் வரத்தமானியில் வெளியிடுவதற்கு தீர்மானித்திருக்கும் போது கொவிட் தொற்று நோய் நிலைமை மற்றும் ஒரு காணிப்பதிவாளர் அலுவலகத்தின் கீழ் காணி நிர்ணயத் திணைக்களத்தின் 5-6 பிராந்திய அலுவலகங்களுடன் தொடர்புகளை வைத்திருத்தல் தாக்கமளித்திருந்ததுடன் உரிமைச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள காணி உரிமையாளர்கள் முன்வராமை உரிமையாளர்களின் நிகழ்கால வதிவிடத்தினை தேடிக் கண்டுபிடிக்க முடியாமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் உரிமைச் சான்றிதழினை வழங்கும் செயல் முன்னேற்றத்தில் சில | உரிமைச் சான்றிதழினை பகிர்ந்தளிக்கும் போது ஏற்படுகின்ற பலவீனங்களை இனங்கண்டு அவற்றினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வீழ்ச்சிகள் காணப்பட்டிருந்தும் எதிர்காலத்தில் செயல்முன்னேற்றத்தை முன்னேற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிமைச் சான்றிதழ்களை வழங்குவது சம்பந்தமாக உருவாகியுள்ள நிர்ணயிக்க முடியாத பல சிக்கல்களின் காரணமாக பிற்போடப்பட்ட மொத்த கோவைகளின் எண்ணிக்கை 455,271 என அறிவிக்கப்பட்டிருந்ததுடன் வெலிகபொல, இரத்மலானை, தெறிவளை, நல்லூர் ஆகிய பிராந்திய அலுவலகங்களினால் பிற்போடப்பட்ட கோவைகளுக்குரிய தகவல்களை மீளாய்வாண்டின் இறுதி வரை வெளிப்படுத்தியிருக்காததனால் மேற்கூறிய எண்ணிக்கைக்கு அவை உள்ளடக்கப்படவில்லை. | 2002- 2021 காலப்பகுதியில் நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் அனைத்து காணிகளுக்கும் நில அளவைச் சான்றிதழினை வழங்குதல் திட்டமிடப்பட்டிருந்தும் நில அளவை நடவடிக்கைகளுக்காக நில அளவையாளர்களின் பற்றாக்குறை, உதவி ஆணையாளர்கள், மற்றும் புலனாய்வு உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை இந்நிகழ்ச்சித்திட்டத்தினை விரிவுபடுத்துவதற்கு தடையாக இருந்ததுடன் தற்பொழுது செயல்முன்னேற்றத்தினை மேம்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பிற்போடப்பட்ட கோவைகள் சம்பந்தமான செயல்முன்னேற்றத்தை பரீட்சித்தலினை மாதாந்தம் அவதானிப்பேன். | பிற்போடப்பட்ட கோவைகளில் காணப்பட்ட சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்கு ஒரு வேலைத்திட்டத்தினை தயாரித்து அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

**...........................................................................**

### 4.1 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை இனங்காணல்

**...................................................................................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்**<br>**.............................................** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**<br>**...............................** | **சிபாரிசுகள்**<br>**....................** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் இனங்காணப்பட்டிருந்தும் உரிய குறிக்கோள்கள் ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் ஸ்தாபிக்கப்படுகின்ற நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களுடன் தொடர்புபடும் முறைமை மற்றும் 2030 ஆம் ஆண்டு வரையான காலத்தில் நிறைவேற்றுவதற்கு | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக தற்பொழுது உத்தியோகத்தர்களுக்கு கடமைகள் ஒப்படைக்கப்பட்டள்ளன. | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு தேவைப்படுகின்ற திணைக்களத்தின் பங்களிப்பினை |

| | | |
|---|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் உறுதியாக இனங்காணப்படவில்லை. அதற்கிணங்க நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தின் பங்களிப்பு உறுதியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | | இனங்கண்டு அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. நல்லாட்சி

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நி.பி 133 இன் பிரகாரம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தேற்றுவிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் ஆண்டின் போது எந்த கணக்காய்வு ஐய வினாவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது கணக்காய்வுத் திட்டத்தினை அங்கீகரித்தல் இடம்பெற்றுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்காக இன்றுவரை 10 கணக்காய்வு ஐய வினாக்கள் வழங்கப்பட்டுள்ளன. | உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினை அங்கீகரித்து அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 6. மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் சிரேஷ்ட மட்டத்தில் 74 வெற்றிடங்களும் மூன்றாம் மற்றும் இரண்டாம் மட்டத்தில் 1,071 வெற்றிடங்களும் உள்ளடங்களாக ஒட்டுமொத்தமாக 1,251 வெற்றிடங்களும் காணப்பட்டன. | இத்திணைக்களத்தின் பதவியணியினர் 815 ஆக இருந்த போதிலும் திணைக்களத்தின் விடயத்துறையில் மூன்று மாவட்ட அலுவலகங்களும் இன்னும் 47 மேலதிக அலுவலகங்களையும் ஆரம்பித்து பேணும் தேவைப்பாடு இன்னும் காணப்படுகின்றது. | திணைக்களத்தில் திறக்கப்பட்டுள்ள பிராந்திய அலுவலகங்களுக்கு மற்றும் திறக்கப்படாத வடக்கு கிழக்கு மாவட்ட அலுவலகங்களை ஆரம்பித்து அதற்காக தேவையான ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அல்லது அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அங்கீகரித்த 01 ஆணையாளர் பதவி 03 மாவட்ட ஆணையாளர் பதவிகள், 68 பிரதி/உதவி ஆணையாளர் பதவிகள், சட்ட உத்தியோகத்தர் மற்றும் கணக்காளர் ஆகிய சிரேஷ்ட மட்டத்திலுள்ள 74 பதவிகள், வெற்றிடமாகக் காணப்பட்டதன் காரணமாக திணைக்களத்தின் திட்டமிட்ட இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைந்து கொள்வதற்கான ஒரு தடையாக திணைக்களம் இனங்கண்டிருந்தும் உரிய வெற்றிடத்தை நிரப்புவதற்கு அல்லது சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் அங்கீகரித்த பதவிகளை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத்திணைக்களத்தின் பதவியணியினர் 815 ஆக இருந்த போதிலும் திணைக்களத்தின் விடய துறையில் மூன்று மாவட்ட அலுவலகங்களும் இன்னும் மேலதிக 47 அலுவலகங்களையும் ஆரம்பித்து பேணுகின்ற தேவைப்பாடு இன்னும் காணப்படுகின்றது. | திணைக்களத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக தேவையான உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அல்லது சேவைத் தேவைப்பாட்டின் பிரகாரம் அங்கீகரித்த பதவியணியினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சிரேஷ்ட மட்டத்திலுள்ள பிரதி/ உதவி ஆணையாளர் பதவிகளுக்காக 18 உத்தியோகத்தர்களுக்காகவும் மூன்றாம் மட்டத்திலுள்ள நிருவாக உத்தியோகத்தர் பதவிக்காகவும் நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாது ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். | -மேற்படி- | அங்கீகரித்த பதவியணியில் உள்ளடக்கப்பட்ட பதவிகளுக்காக ஊழியர்களை நிரந்தரமாக நியமித்தல் வேண்டும். |
| (ஈ) | இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டத்தின் 7 பதவிகளில் காணப்பட்ட 1,175 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது சேவைத் தேவைப்பாட்டினை மீண்டும் கவனத்தில் கொண்டு அங்கீகரித்த பதவியணியை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது சேவைத் தேவைப்பாட்டின் பிரகாரம் அங்கீகரித்த பதவியணியினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |